

பத்து ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய இந்நூல் சங்க இலக்கியங்களை வாசிக்கின்றபோது ஏற்படும் அற்புத அனுபவங்களின் புரிதல்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சங்க இலக்கியத்தின் கருத்துகளைப் பன்முக நோக்கில் திறனாய்வு செய்கிற பொழுது பழந்தமிழ் இலக்கியமான சங்கப் பனுவல்களில் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளை மிகுதியாகக் காண முடிகிறது. அவற்றை நவீன வாசிப்புக்கு உட்படுத்தி புதிய கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வளர்த்தெடுக்க முடியும் என்பதை இக்கட்டுரைகளில் காணலாம்.

NCBH

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098.
☎ 044 - 26251968, 26258410, 48601884
www.ncbhpublisher.in | email: info@ncbh.in

ISBN 978-93-8805-039-5
9789388050395
Code No. A3964 ₹ 100/-

# செவ்விலக்கியம் சில பார்வைகள்



ந.இரகுதேவன்

NCBH

Language: Tamil

**Sevvilakkiyam Sila Paarvaigal**

**Author:** N. Ragudevan

First Edition: July, 2018

No. of Pages: 118

Copyright: Publisher

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 098.

Tamilnadu State, India.

Email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

**ISBN: 978-93-8805-039-5**

**Code No. A 3964**

**₹ 100/-**

**Branches**

**Ambattur (H.O.)** 044 - 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462-2323990, 4210990, **Madurai** 0452 2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 0434-3234387 **Ooty** 0423 2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Thiruvannamalai** 04175-223449

செவ்விலக்கியம் சில பார்வைகள்

ஆசிரியர்: ந.இரகுதேவன்

முதல் பதிப்பு: ஜூலை, 2018

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,
16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14
☎: 044 - 28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.



# அணிந்துரை

தமிழின் பண்பாட்டுக் கருவூலமாகிய சங்க இலக்கியம் குறித்த ஆய்வுகள் நூற்றாண்டு கடந்து வளர்ந்து வருகிறது. எத்தனையோ பார்வைகள், எத்தனையோ பதிவுகள், விதவிதமான முடிவுகள் இன்ன துறைசார்ந்த ஆய்வாளர்கள்தாம் சங்க இலக்கியங்களை ஆராயவியலும் என்ற எல்லைகள் எதுவும் கிடையாது. திறனாய்வில் எத்தனை வகையான பார்வைகள் உள்ளனவோ அத்தனை வகையான பார்வைகளுக்கும் அவற்றையும் கடந்த சிந்தனைக்கும் இடந்தருவன நமது சங்க இலக்கியங்கள். இத்தகையதொரு நெடிய பாரம்பரியம் மிக்க சங்க இலக்கிய ஆய்வுத் தடத்தில் தன்னளவிலான பங்களிப்பை இந்நூலின் வழி ஆற்றியுள்ளார் முனைவர் ந.இரகுதேவன்.

தமிழ் இலக்கியவெளியில் வளர்ந்து வரும் சமகாலத் தலைமுறை தலித் படைப்பாளியாக அறியப்படும் முனைவர் ந.இரகுதேவனுக்குள் உறைந்திருக்கும் மரபிலக்கிய நாட்டம் இந்நூலில் புலப்படுகிறது. செவ்விலக்கியங்கள் குறித்து 'செவ்விலக்கியம் சில பார்வைகள்' எனும் இந்நூலில் நூலாசிரியரின் சில கூர்மையான சிந்தனைகள் வெளிப்படுகிறது.

இந்நூலில் முதலாவதாக அமையும் கட்டுரையில் நாடகச் செய்யுள் எனச் சுட்டப்படும் கலித்தொகையில் ஒரு பகுதியாக அமையும் குறிஞ்சிக்கலியை தொல்காப்பியரின் மெய்ப்பாட்டுக் கோட்பாட்டைப் பயன்படுத்தி ஆராய்ந்துள்ளது. இவ்விடம் காதலர் தம் உளக்குறிப்புகளையும் உடல் இயங்குதலையும் அறிய வியல்கிறது. பிசிராந்தையாரின் பாடல்களை ஆராயுமிடத்தே புலவர் தாம் பெற்ற உலகியல் அனுபவங்களை அரசற்கு எடுத்தியம்பி அவரை அறத்தின் வழி ஆட்சிபுரிய நெறிப்படுத்துவதாகவே பாடல்கள் உள்ளன என முடிவுரைக்கிறார். பிசிராந்தையாரின் பாடல்களில் திணை - துறை தகவல்கள் குறித்து ஆராயப்புகுந்த இக்கட்டுரை அத்திசைவழி பயணித்திருப்பின் இன்னும் ஆழம் பெற்றிருக்கக்கூடும். 'சங்ககாலத் தொல்குடி மக்களின் அடிசில் கலைகள்' எனும் கட்டுரை நூலாசிரியரின் பண்பாட்டுப் புலமைக்குச் சிறந்த சான்றாகும். சங்ககாலத் தொல்குடி மக்களின் உணவுப் பண்பாட்டினை தரவுகளின் வழி ஆராய்வதுடன் சமகாலத்திலும் வழக்கில் தொடரும் பண்பாட்டு நீட்சியினையும் ஆதாரத்துடன் எடுத்தியம்புகிறார்.